# அன்புத்தாயின் துயர்

மகளே உனக்காக...
கோயில் தோறும் கும்பிட்டேனே...
சாமிகள் எல்லாம் வேண்டினேனே...
என் வேண்டுதல்களும்,
தவங்களும்
உன்னைச் சுற்றியே
இருந்திருக்கின்றனவே...
கடவுள்கள் கருணையற்றுப்
போயினவே...

யுத்தங்கள் தோறும் குட்டியாய்
காவினேன்...
குண்டுகள், சன்னங்கள் தொடாமல்
பார்த்தேனே...

எல்லா குழந்தைகளையும் விட
உன்னில் பெரும் அக்கறைகள்
நீண்டநாள் கொண்டிருந்தேனே...
எப்போதுமே
சிறு குழந்தையாக பார்த்தேனே...

காலம் முழுவதும் எனக்கு
போராட்டமானதேன்?
காலம் மாற்றங்களில் உனக்கான
வாழ்வு வராமல் போனதேன்?

நீ கேட்டதெல்லாம் தந்திட
போராடி
கிடைத்திடும் காலங்கள் கூடினவே...
இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்காக எல்லாம்
தோற்றுப்போய்
தேற்ற வழியின்றி
தேம்புகின்றேனே...

நான் உனக்காக
பட்ட துன்பங்களும்
வருந்திய துயரங்களும்
சிந்திய கண்ணீரும்
கவலைகளாகவும்
வேதனைகளாகவும்
வாழும் காயங்களாக
தந்து போனாயே...

மகளே நீ மீண்டு(ம்) வந்துவிடு
கடவுளே என் மகளை தந்துவிடு

உனக்கான இறுதி உரைக்கான
எல்லா நேரங்களும் இதுவானதே..!

**அம்மா**
**செல்வானந்தன் ஞானசரஸ்வதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழையின் தோழியே!

மணவோலை வருமென்று காத்திருந்தோம் - நீ
மறைந்த செய்தி கேட்டுத் துடித்தோம்
அறிவும் ஆளுமையும் கொண்டவளே!
அன்பால் பலர் இதயம் வென்றவளே!
ஏழையின் தோழியே! இணையற்ற சேவகியே!
காலனும் உன் புகழ் கண்டு பொறாமையுற்று
கண்ணி வைத்து கொண்டு சென்றானோ?

கனிவாய் மழலை சிந்தி நீ கழித்த பருவம்
இனிப்போடு விளையாடி நீ சிரித்த பருவம்
துள்ளி நடைபயின்று நீ பள்ளி சென்ற பருவம்
துடிப்போடு கவி எழுதி நீ மகிழ்ந்த பருவம்
கார்மேகம் கூந்தல் ஆடிவர
கனவுகள் சுமந்த கன்னிப் பருவம் - இடையில்
கருகித்தான் போகுமென்று - நாம்
கனவிலும் நினைக்கவில்லை.

பெற்றவள் மனம் நொந்து தவிக்கிறாள் - கூடிப்
பிறந்தவரே நிலைமறந்து துடிக்கின்றார்.
உற்றவரும் ஊரவரும் உன் பெயர் சொல்லி
உள்ளத்தால் உருகி அழுகின்றார்.

பிறப்பிற்கு கணக்குவைத்த இறைவன் - மனிதன்
இறப்பை மட்டும் இரகசியமாய் வைத்துவிட்டான்
விதி என்ற வலைக்குள் தாமிதுகே
விரக்தியுற்று அழுது மாய்கின்றோம் - நீ
சிவன் கழலே தஞ்சமென்று உறங்கு தாயே!
ஆத்மா சாந்திக்காய் கரம் கூப்பி நிற்கின்றோம்.

**பிரபலசிங்கம் மாமா குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பகிர்வு - செல்வி.ரஜீபா செல்வானந்தன்

கிளிநொச்சி மண்ணின் பெயர் சொல்லும் பேரூராம் உருத்திரபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு, வாழ்வின் இறுதிக் கணம் வரை தன் ஊரின் ஓர் அடையாளமாக, நலிந்துபோயுள்ள மக்களை நாடிச்சென்று உதவுவதற்காக ஓய்வற்று உழைத்த ஒருவராக, உருத்திரபுர ஊரின் எல்லைகளைக் கடந்து, வடக்கிலும், கிழக்கிலும் வலிசுமந்து நிற்கும் மக்களின் கண்ணீரைத் துடைக்கக் கரம்கொடுத்த அமரர். ரஜீவா செல்வானந்தம் அவர்களின் இழப்பு, அவரை அறிந்த அத்தனை பேரும் இயற்கையின் மீது கோபம்கொள்ளும் அளவுக்கு, எல்லோரையும் இடிந்துபோகச் செய்த பேரிழப்பாய் அமைந்துவிட்டது.

“உதவும் உறவுகள்” என்னும் வலிந்துதவு சமூக சேவை அமைப்பின் உத்தியோகத்தராகவே அவருக்கும், எனக்குமான அறிமுகம் நேர்ந்திருந்தது. என்னை நேசிக்கும் சகோதரர் வெற்றிமயில்நாதன் அவர்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில், சுவிஸ் நாட்டைத் தோற்றுவாயாகவும், கிளிநொச்சியைத் தளமாகவும் கொண்டு செயற்பட்டுவரும் அந்த அமைப்பின் இயங்குவிதியை இறுகப்பற்றிக்கொண்டு, அதனையே தன்னுடைய இலக்காக வரித்துக்கொண்ட ரஜீபாவின் வாழ்க்கைப் பயணம் இத்தனை அகாலத்தில் முடியும் என்று எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

வாழ்வின் நிலையாமை குறித்த புரிதல்கள் எம் எல்லோருக்கும் இருந்தபோதும், இழப்புக்களாலும், வலிகளாலும் இயலாமையைச் சுமந்து, வாழ்வதற்காகப் போராடும் மக்களையும், சமூகத்தையும் நேசித்து வாழ்ந்த ரஜீவாவைப் போன்றோரின் ஏற்கமுடியாத இளவயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணங்களின் மூலம், இன்னும் சிறிதுகாலமேனும் அவர்கள் வாழ்ந்திருக்கலாமே என்ற ஆழ்மன வலியும், வாழ்க்கை குறித்த அச்சமும் எங்கள் மத்தியில் இயல்பாய் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

போரின் வடுக்களிலிருந்து இன்னும் மீண்டெழ முடியாது தவிக்கும் எமது சமூகத்தை நேசித்த பெண் ஆளுமையாக, அன்பும், அறனும் தன் இதயத்தில் சுமந்த சமூக சேவகியாக இருந்து, மக்கள் மனங்களில் இறந்தும் உயிர்வாழும் பெரும்பேறு பெற்ற தெய்வப்பிறவியாய் வாழ்ந்து மறைந்த இவரின் இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாதென்ற போதும், காலத்தின் சமரசங்களுக்கு கட்டுப்பட்டேயாக வேண்டிய கட்டாயத்தை ஏற்று, இவ்வுலக வாழ்வை நீத்த அன்னாரின் ஆத்மா, இறைவனடியில் அமைதிபெற வேண்டுவதோடு, எதிர்பாராது நிகழ்ந்த இவ் இழப்பின் துயர்சுமந்து நிற்கும் அவரது தாயார், சகோதரர்கள், மற்றும் உறவுகளின் துயரில் நானும் பங்கெடுத்துக் கொள்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
**பாராளுமன்ற உறுப்பினர்.**
**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு கனக்கும் துயரம் சுமந்து

ஊரின் உறவாய் உள்ளம் நெகிழ்ந்தவளே!
பாரெல்லாம் போற்றும் பண்பின் திருவுருவே!
ஈர விழியாகி இதயங்கள் அழுகிறதே
நேரமிது நெஞ்சம் கனந்து உருகிறதே
உதவும் உறவாகி ஊருக்கு உழைத்தவளே
இதமாகப் பேசி இதயங்களை வென்றவளே
நிதமும் பணியில் நின்றுயிர் கொடுத்தவளே
மதம் மொழி இனங்கடந்த மனிதநேயத்தாளே
சதமரை கடக்க முன்னே சரிந்தது தேகமேனோ?
வதமது வருத்தம் வந்து வாழ்வினைத் தொலைத்ததேனோ?
ஊருறவெல்லாம் கூடி உள்ளத்தால் உருகி நிற்க
நீருடல் உயிரை நீத்து இறையினுள் கலந்தாயம்மா
வேருடன் விழுது மற்றும் பூவுடன் பிஞ்சும் காயும்
பேருடன் புகழும் பூத்த பேறெனும் குடும்பம் நீத்து
தீயுடன் சங்கமித்த தீதிலா மதியினாளே
விதியினை வெல்லாமோ வேறென்ன செய்வோம் தேங்காய்
ஆண்டுகள் நூறானாலும் அகமெலாம் வாழ்வாயம்மா

**உருகும் உள்ளம்**
**கலாகணேசன் குடும்பம்**
**உருத்திரபுரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை அணங்கே ரஜீவா

உருத்திரபுரத்தின் முதற்தர குடியேற்றத்தின் முதலாம் விட்டு வழித்தோன்றலாக திரு.திருமதி.செல்வானந்தன் ஞானசரஸ்வதி அவர்களின் புத்திரியாக அவதரித்த ரஜீவா தனது கல்வியை கிளி/புனித பற்றிமா பாடசாலையில் கற்றார்.

இவர் தம் குடும்பத்தினரை அறிவு தெரிந்த வயதிலிருந்து தெரிந்தவராக இருந்தும் இவரை நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பு 1996ஆம் ஆண்டு இடப்பெயர்வில் ஸ்கந்தப்புரத்தில் இருக்கும் போது கணித பாடத்தினை கற்பதற்காக என்னிடம் வருகை தந்த போது கிடைத்தது. ஒரு அமைதியான அடக்கமான நல் மாணவி.

கடந்த சில வருடங்களுக்கு முன் நான் கிளி/சிவநகர் அ.த.க பாடசாலைக்கு வந்த போது தங்கை ரஜீவா **"உதவும் உறவுகள்"** அமைப்பில் பணிபுரிந்த வேளையில் அவர் தம் உறவு என்னுடன் நெருக்கமாக்கபட்டது. அவரிடம் இருந்த சிறந்த பண்புகளை நான் இனங்காணக்கூடியதாக இருந்தது. அமைதி, அடக்கம், இவற்றினூடாக அவர் பெற்றிருந்த அறிவார்ந்த தகவல்கள், அத்தகவல்களை வெளிப்படுத்தும் தன்மையின் சிறப்பு, ஆளுமை, அறிவாற்றல் போன்றவற்றை அவரிடம் கண்டேன்.

தங்கை ரஜீவா என்றால் நினைவில் வருவது நீண்ட நெடிய கருங்கூந்தல் அணங்கு அவள், உடை அணிகலன்கள் அணியும் பாணி, புன்னகை புன்சிரிப்பு அடக்கமான உரையாடல், உறவுகள், அயலவர்களை மதிக்கும் பண்பு சமூகத்தின் பால் கொண்ட சமூகப்பணி என்பவற்றை நான் கண்ட மானிடப் பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றீர்கள் அக்கா?

மற்றவர்கள் பசிதீர்ப்பவர் பல காலம் வாழ்வார் என்று எமது முதியோர் கூறிய வார்த்தை பொய்யானது. உங்கள் குடும்பத்தினரை ஆழ்ந்த துயரில் ஆழ்த்திச் சென்ற நீங்கள் என்னை நித்தம் அழவைத்துச் சென்றதன் காரணம் என்ன? எனது வாழ்க்கைப் பயணம் வெற்றி அடைய வேண்டும் என எண்ணிய தாம் தமது வாழ்க்கைப் பயணத்தை இடையில் முடித்ததன் காரணம் என்ன அக்கா? முதியவர் இல்லம், சிறுவர் இல்லம் என துடி துடித்துச் சென்று உணவு ஊட்டிய தமக்கு இந்நிலைமை தந்ததால் இறைவன் தன்னிலையற்றவன் ஆனால் எனது வாழ்வின் ஒவ்வொரு வெற்றிகளும் தமது வார்த்தைகளுக்கு அடுத்ததாக இருந்தது அக்கா. ஏதாவது விடயத்தில் நான் கவலையுற்றால் கவலைப்படக் கூடாதென அறிவுரை கூறிய தாம் ஏன்னை வாழ்நாள் முழுதும் கவலையெனும் கடலில் விட்டுச் சென்றதன் காரணம் ஏன் அக்கா? எந்த மரக்கன்று வேண்டினாலும் தம்பிக்கு ஒன்று என வேண்டிக் தந்த தமது மரக்கன்றுகள் செழித்து பூத்துக் காய்த்துக் குளுங்குகின்றன. அவை அழகாய் இருக்கின்றன. ஆனால் அதைப் பார்த்து ரசிக்கத் தாம் இல்லை. என்னுடன் இன்று தாம் நட்ட வில்வக் கன்று செழித்து நிற்கிறது ஆனால் தம்மைக் காணாத எமது கண்கள் செளிப்பற்று இருக்கிறது அக்கா.

எங்கு சென்றாலும் நான் இங்கு செல்கின்றேன் பெரியம்மாவை பார்த்துக்கொள் என சொல்லி விட்டுச் செல்லும் தான் இங்கு செல்லும்போது மட்டும் ஏதும் சொல்லாமல் சென்ற காரணம் ஏது? தம்முடன் ஒரு சில இடங்களுக்கு வந்து தாம் மற்றவர் மீது கொண்ட அக்கறை கண்டு மெய்சிலிர்த்தேன். ஆனால் அந்த இறைவன் ஏன் மெய்மை கொண்ட அந்த எமன் கொண்டு தமது உயிர் பறித்தான். வலக்கை செய்வதை இடக்கை அறியக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *நன்றி நவிலல்*

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

அமரர்.செல்வானந்தன் றஜிபாவின் பிரிவுச்செய்தி கேட்டு ஓடி வந்து உதவி, ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்தோர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாதைகள் வெளியிட்டோர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், மேலும் பல வழிகளில் எமக்கு உதவிய உள்ளங்களுக்கும், மலரினை அச்சிட்டுத்தந்த தேவன் பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

*வல்லிபுரம் + *சின்னத்தங்கம்
- செல்வானந்தன்
- *சிவானந்தன்
- புனிதவதி
- பாலாம்பிகை
- பரமானந்தன்
- மனோன்மணி
- *விவேகானந்தன்
- பாலதேவி
- பத்மாவதி

*சுப்பிரமணியம் + *சின்னம்மா
- *சந்தானலட்சுமி
- *பேராதரசிங்கம்
- *பேராயிரசிங்கம்
- ஞானசரஸ்வதி
- பிரபலசிங்கம்
- ஞானலட்சுமி
- *ஞானேஸ்வரி
- சிவசக்தி
- தேவசிங்கம்
- வெற்றிமயில்நாதன்

செல்வானந்தன் + ஞானசரஸ்வதி
- நந்தகுமார்
- மீளவேணி + நாகசுதீஸ்கரன்
  - அர்தனா
  - அக்சயன்
  - அன்சிகா
- வத்சலா + கரன்
  - அருணிகா
- *ரஜீவா
- அஸந்தன்

* அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

